Tamil Short Story - Honourable Mention
வைத்தியநாதன் நடராஜன் (பனசை நடராஜன்)
Vaithiyanathan Natarajan (Panasai Natarajan)
ஆணிவேர்கள் (Taproots)

# ஆணிவேர்கள்

”சிவாவோட அப்பா இறந்துட்டாராம் பன்னீர். இப்போதான் சிவாவோட மாமா தொலைபேசியில சொன்னார். இதை எப்படி போய் அவன்கிட்ட சொல்றது?” தயங்கத்தோடு சொன்ன தமிழரசனின் குரலில் கவலை தோய்ந்திருந்தது.

இப்போது மணி அதிகாலை மூன்று ஆகிறது. அந்தத் தொடர்வண்டிப் பாதையின் பராமரிப்புப் பணியில் அசுர வேகத்தில் வேலை செய்து கொண்டிருந்தான் சிவா.

இந்தியாவின் தமிழகத்தில் பெயர் சொன்னால் தெரியாத கிராமம் அவனது பூர்வீகம். அதிகம் படிக்காததால் பணியாளாகதான் வேலை கிடைத்தது. முகவருக்கு ஐந்தாயிரம் சிங்கப்பூர் வெள்ளிகள் சேவைக் கட்டணமாகக் கட்டி வந்து ஒன்றரை ஆண்டுகள் ஆயிற்று. கடனெல்லாம் முடித்து நிமிர்கையில்தான் அப்பா பக்கவாதம் வந்து படுத்தார். பல மருத்துவமனைகளில் காண்பித்ததில் வெவ்வேறு காரணங்களைச் சொன்ன மருத்துவர்கள் பணம் வாங்குவதில் மட்டும் ஒன்றாக இருந்தார்கள். எப்படியும் குணமாக்கி விடலாம் என்ற நம்பிக்கையில் மொத்தச் சம்பளமும் அப்பாவுக்காகச் செலவானது. போதாதற்கு கடனும் வாங்கிச் சமாளித்துக் கொண்டிருந்தனர் அம்மாவும் மாமாவும். இரண்டு மாதங்களாக மருத்துவர்கள் சொன்ன நம்பிக்கை மொழிகள் இன்று பொய்த்து போய் மரணச்செய்தி வந்து விட்டது.

நள்ளிரவு ஒரு மணியிலிருந்து அதிகாலை நான்கரை மணிக்குள் வேலை முடித்தாகணும் என்பதால் தீப்பிடித்துக் கிளம்பும் ஏவுகணை போல வேலை நடந்து கொண்டிருந்தது. சுமார் எண்பது பேர் பராமரிப்பு வேலையில் மும்முரமாக இருந்தனர். காலையில் தொடர்வண்டி ஓட மீண்டும் பாதை தயாராயிருக்கணுமே. இருப்புப் பாதையில் இறங்கிய முக்கால் மணிநேரம் கழித்தே இரக்கமில்லாத மழை கொட்டோ கொட்டென்று பெய்து இப்போதுதான் ஓய்ந்தது. அதற்காக பாதியிலெல்லாம் வேலையை நிறுத்த முடியாதென்பதால். தொப்பலாக நனைந்த படியே எல்லோரும் வேலையைத் தொடர்ந்தனர். சிவா மேற்பார்வையாளர் தமிழரசனிடம் தன் கைத்தொலைபேசியை நனையாமல் இருக்க நெகிழிப் பையில் வைத்திருக்கும்படி கொடுத்து விட்டு வேலை செய்து கொண்டிருக்கிறான்.

பாதுகாப்பு அதிகாரி பன்னீர் இந்த துக்க செய்தியைக் கேட்டதும் தான் சொல்ல வந்ததையே மறந்து போனார். தமிழரசன்தான் கேட்டார்.

“ஏதோ சொல்ல வந்தீங்க. யாரோ கீழே பேசிட்டு இருக்காங்க.. என்னவாம்?”

“அதை ஏன் கேக்குறீங்க? நாம வேலை செய்யுற சத்தம் அவங்களுக்கு ரொம்ப தொந்தரவா இருக்காம். எப்படி நாங்க தூங்குறதுன்னு கேக்குறாங்க. அவ்ளோ தூரம் தள்ளி புளோக்குக்கு உள்ளே இருக்கிற

அவங்களுக்கே சத்தமா இருக்குன்னா இங்கே பக்கத்துல நின்னுகிட்டு வேலை பாக்குற நமக்கு எப்படி இருக்கும்?” விரக்தியோட சொன்னார் பன்னீர்.

“சரி சரி.. என்னதான் ஆச்சு. இப்போ இன்னொருத்தர் அவரோட பேசிட்டு இருக்காரே?” என்றார் எட்டிப் பார்த்துவிட்டு.

”அவரு தேசிய சுற்றுப்புற வாரியத்துக்கு போன் அடிச்சு சொல்லிட்டார். அங்கேயிருந்து வந்த அதிகாரிதான் பேசிக்கிட்டு இருக்கார். இது முக்கியமான வேலைன்னும் முடிஞ்ச வரை சத்தமில்லாம வேலை பார்க்க சொல்றேன்னும் சமாதானப் படுத்திட்டு இருக்கார். ஆனா அவர் விடுறதா இல்ல. அதான் உங்கக்கிட்ட சொல்லி கொஞ்சம் அமைதியா வேலையப் பாருங்கன்னு சொல்ல வந்தேன்.”

தமிழரசனுக்கு சிரிப்பதா அழுவதான்னு தெரியல. சத்தமே இல்லாம வேலை பார்க்க இது என்ன அலுவலக வேலையா? தண்டவாள வேலையில் சத்தமில்லாம எப்படி? அதிருக்கட்டும்.. இப்போ உடனே சிவா வேலையை பார்ப்போம்னு பன்னீரை அழைச்சுட்டு சிவாவிடம் போய் ”சிவா.. இங்கே வா” என்று அழைத்தார்.

இவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை நடக்கும் போது தன்னை மட்டும் ஏன் அழைக்கிறாரென்ற குழப்பத்தோடு வந்தவனுக்கு “உங்க மாமா போன் பண்ணினார்”னு சொன்னதும் கண்ணீர் முட்டியது.

“ஆமாம் சிவா. இப்போதான் அப்பாவோட உயிர் பிரிஞ்சுதாம். உனக்காகதான் காத்திருக்காங்களாம். ஆபீஸ்க்கு போய் பாஸ்போர்ட் எடுத்துட்டு வரச் சொல்றேன். நீ விடுதிக்கு பன்னீர் கூட போய் கிளம்பி வா. விமானநிலையத்துக்கு ஆறு மணிக்கு போனால் கூட ஏதேனும் சென்னை விமானத்தில் இருக்கை இருக்கான்னு கேட்டு பயணச்சீட்டு வாங்கிடலாம்”

சிவாவின் கண்களில் இப்போது கண்ணீர் மழை. நனைந்ததால் நடுங்கிய உடல் இப்போது மேலும் நடுங்கியது. வளர்த்து ஆளாக்கிய அப்பாவின் கடைசி நாட்களில் கூட அருகில் இருக்க முடியாத நிலையை நினைத்து துக்கம் அழுத்தியது. ஆனாலும் இப்போது அதற்கெல்லாம் நேரமில்லை. இன்னும் சிலமணி நேரத்தில் விமானநிலையத்தில் இருக்க வேண்டும். சென்னை செல்லும் ஏதேனுமொரு விமானத்தில் இருக்கை கிடைக்க வேண்டும். பதட்டத்தோடு பன்னீரோடு கிளம்பினான். வாகனத்தை இயக்கி கிளம்பும் போது பன்னீர் கவனித்தார். இன்னும் அந்த நபர் அதிகாரியிடம் சத்தமாக இருக்கிறதென்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.